# தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும்

## தொகுதி - 1

**பதிப்பாசிரியர்**

முனைவர் கோ.விசயராகவன்

முனைவர் மூ.கவிதா

முனைவர்.நா.சுலோசனா

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113

# நூல் விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும் (தொகுதி - 1) |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் கோ.விசயராகவன்<br>இயக்குநர் (மு.கூ.பொ)<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>சென்னை - 600 113.<br><br>முனைவர் மூ.கவிதா<br>உதவிப் பேராசிரியர்<br>தமிழ்த்துறை, ஸ்ரீ இராமசாமி நாயுடு<br>ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்.<br><br>முனைவர் நா.சுலோசனா<br>உதவிப் பேராசிரியர்<br>தமிழமொழி (ம) மொழியியல் புலம்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>தரமணி, சென்னை - 113. |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>இரண்டாம் முதன்மைச் சாலை,<br>தரமணி, சென்னை-600 113.<br>தொலைபேசி எண்: 044-22542992 |
| வெளியீட்டு எண் | : | |
| ISBN | : | 978-93-85165-37-5 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2018 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6கி.பி. டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டம்மி |
| எழுத்தின் அளவு | : | 11 புள்ளிகள் |
| பக்க எண்ணிக்கை | : | xiv+364 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | ரூ. 470/- (ரூபாய் நாநூற்றி எழுபது மட்டும்) |
| அச்சகம் | : | நவநீதம் அச்சகம், சென்னை |
| பாடம் | : | ஆய்வுக் கட்டுரைகள் |

# பொலன்னறுவைக் கால சிங்கள மன்னராட்சியில் இந்துசமயம்.

திருமதி. அனித்தா சசிகரன்
விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
இலங்கை

**அறிமுகம்**

இலங்கையில் இந்துமதம் மிக நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. வரலாற்று உதய காலத்திலிருந்தே இந்து மத வழிபாடுகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் என்பன நிலவியிருக்கின்றன. ஜே. டபிள்யூ பெனற் என்பவர் எழுதிய இலங்கைச் சரித்திரம் நூலில் "இலங்கைத் தீவில் ஆதியில் குடியேறியவர்கள் இந்துக்கள்" எனக்குறிப்பிடப்பட்டுளார். இதேபோன்று சேர். உவில்லியம் என்பவரும் இலங்கைத் தீவில் உள்ள பல்வேறு குடிகளின் மொழி, இலக்கியம், சமயம், பழைய ஞாபகச்சின்னங்கள் என்பவற்றை நோக்குமிடத்து இத்தீவானது வரலாற்று உதய காலத்தொடக்கமாக இந்துசமயக் குடிகளையே கொண்டதாதல் வேண்டும் என்பது புலனாகிறது" எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் இந்துமதமானது இலங்கையில் வரலாற்றுத் தொடக்க காலத்தில் இருந்தே செல்வாக்குப் பெற்றிருந்தது. இருப்பினும் அரச ஆதரவு பெற்ற மதமொன்றுக்கான கட்டமைப்பை பெற்றிருக்கவில்லை. இதனால் அனுராதபுர அரசின் எழுச்சியுடன் பௌத்தம் அரச மதமொன்றுக்கான வலிமையைப் பெற்று வளர்ச்சியடையத் தொடங்கியது. பௌத்தமதம் அரச மதமொன்றுக்கான அந்தஸ்தினைப் பெற்றுக் கொண்டபோதும் இந்தமதத்தின் செல்வாக்கு அனுராதபுர, பொலன்னறுவைக்கால அரசசபையில் நிலவி வந்ததை பாளி இலக்கியங்கள், கல்வெட்டுச் சான்றுகளினூடாக அறிய முடிகின்றது.

**வளர்ச்சிக்கான பின்னணி**

பல்லவர் காலத்தில் தமிழ்நாட்டில் இடம்பெற்ற சமய மறுமலர்ச்சியின் காரணமாக இலங்கையிலும் இந்துசமயச் செல்வாக்கு அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால் கி.பி 10ஆம் நூற்றாண்டளவில் தான் இந்துசமயம் எவ்வித எதிர்ப்புமின்றி உச்சவளர்ச்சி பெற்றுக்கொண்டது. இதற்கு களம் அமைத்துக் கொடுத்தவர்கள் சோழர்கள் ஆவர். இதனாலேயே சோழர்காலம் ஈழத்தமிழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனைக் காலமாக நோக்கப்படுகின்றது. இலங்கையில் சோழருடைய 77 ஆண்டுகால ஆட்சியானது மீள்மாற்றம் செய்யமுடியாத பல மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது. சோழர்கள் இலங்கையில் ஏற்படுத்திய தாக்கத்தில் பண்பாட்டு பாதிப்பே அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. வரலாற்றாசிரியர்கிங்ஸ்லி டி சில்வா கூறுகையில் "சோழராட்சியின் தவிர்க்க முடியாத தாக்கம் என்னவெனில் ஈழத்தின் மதத்துறையிலும், பண்பாட்டுத்துறையிலும், இந்துப்பிராமண மரபுகளும், வழமைகளும், திராவிடக்கட்டக்கலையும், தமிழ்மொழியும் ஊடுருவி மிகப்பலமாக வளர்ச்சி பெற்றதேயாகும் என்கிறார். கி.பி 1070இல் 1ஆம் விஜயபாகு மன்னனால் சோழர்களினுடைய ஆட்சியை வீழ்ச்சியடையச் செய்த பின்னரும் கூட இந்துமதச் செல்வாக்கு பொலன்னறுவைக்கால அரசசபையில் இருந்து நீங்கவில்லை.

இதற்கு சோழராட்சியின் போது இலங்கையில் குடியேறிய படைவீரர்கள், வணிகர்கள், கலைஞர்கள், நிர்வாகிகள், பிராமணர்கள் போன்ற வகுப்பினர் காரணமாகும். அதாவது இவ்வகுப்பினர் சோழராட்சி இலங்கையில் நடைபெற்ற போது மிகுந்த செல்வாக்கு பெற்றதோடு, இந்துமதத்தை கடைப்பிடித்த தமிழர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் சோழராட்சியைத் தொடர்ந்து வந்த சிங்கள மன்னராட்சிக் காலத்திலும் இங்கு நிலைத்து நின்றதோடு மன்னர்களின் ஆதவைப் பெற்று செல்வாக்கு செலுத்தலாயினர். குறிப்பாக சோழராட்சிக்காலத்தில் இலங்கை வந்த இராணுவப் பிரிவினரான வேளைக்காரர், அகம்படியார், வலங்கை, இடங்கை, அணுக்கார் போன்றோருள் வேளைக்காரர் தொடர்ந்துவந்த சிங்கள மன்னராட்சிக் காலத்திலும் செல்வாக்கும் பெற்றிருந்தனர். சான்றாக 1ஆம் விஜயபாகு, 1ஆம் பராக்கிரமபாகுமன்னர்களுடையஆட்சியில் அவர்களுடைய முக்கிய சின்னமாகிய தளவாய் தந்ததாதுக்கோயிலைப் பாதுகாக்கும் பொறுப்பினைப் பெற்றிருந்ததைக் குறிப்பிடலாம். இவ்வாறு சிங்கள மன்னர்களுடைய நம்பிக்கைக்குரிய படைப்பிரிவாகச் செயற்பட்ட இவர்கள் இந்து

மதத்தினைப் பின்பற்றியிருந்ததோடு இந்துமதம் வளர்ச்சி பெற வழங்கிய ஆதரவுகளும் பொலன்னறுவைக்கால சிங்கள மன்னராட்சியில் இந்துமதம் செழிப்புற்றிருக்க காரணமாகும்.

சோழராட்சி மற்றும் அவர்களால் குடியேற்றப்பட்ட வகுப்பினரால்மட்டுமன்றி சிங்கள மன்னர்கள் தென்னிந்திய அரசவம்சங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட திருமண உறவுகளும் இந்து மதத்தினை வளர்த்தெடுத்தது. குறிப்பாக பாண்டிய, கலிங்க, கன்னோசி வம்சங்களுடன் மேற்கொண்ட திருமண உறவுகளைக் குறிப்பிடலாம். சோழரை இலங்கையில் இருந்து நீக்கிய 1ஆம் விஜயபாகு சோழரின் எதிரிகளாக இருந்த பாண்டியர்களுடன் திருமண உறவை ஏற்படுத்திக் கொண்டான். தன்னுடைய தங்கைமித்தாவை பாண்டிய இளவரசனுக்கு மணமுடித்துக் கொடுத்தான். இவர்களினுடைய பிள்ளைகளே மானாபர்ணன், கீர்த்திசிறீமேகன், சிறீவல்லபன் ஆவர். பாண்டிய வழிவந்த மானாபர்ணனின் மகனே பொலன்னறுவைக்கால தலைசிறந்த மன்னர்களில் ஒருவனான 1ஆம் பராக்கிரமபாகு ஆவான். மேலும் 1ஆம் விஜயபாகுவின் இரு அரசிகளான லீலாவதி, திரிலோகசுந்தரி ஆகியோர் இந்திய வம்சத்தைச் சேர்ந்தவர்கள். 1ஆம் பராக்கிரமபாகுவின் அரசிகளில் ஒருத்தியான ரூபாவதி கலிங்க வம்சத்தைச் சேர்ந்தவள். இவர்கள் அரசசபையில் இந்துசமயம், இந்துகலாசாரம் என்பவற்றை அனுசரித்துப் பின்பற்றினர். இவ்வாறு பொலன்னறுவைக் கால சிங்கள மன்னர்கள் ஏற்படுத்திய திருமண உறவில் இலங்கை வந்த அரசிகளும் அவர்களது சுற்றத்தவரும் பொலன்னறுவை அரண்மனையிலே இந்துசமயத்தை வளர்த்தெடுத்ததோடு இவ்வரசிகளின் பிள்ளைகளும் இந்து சமயசார்புடைய அரசர்களாகவே அரசாட்சி மேற்கொண்டனர். 2ஆம் விஜயபாகு தொடக்கம் கலிங்கமாகன் வரை (கி.பி 1184 – 1215) பொலன்னறுவை அரசில் 13 பேர் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களுள் பதினொரு பேர் கலிங்கவம்சத்தையும், ஒருவர் பாண்டியவம்சத்தையும் மற்றைய ஒருவர் மட்டுமே சிங்கள வம்சத்தைச் சேர்ந்தவராகவும் ஆட்சி புரிந்துள்ளனர். இதனால் பொலன்னறுவைக் கால அரசில் இந்து சமயமும், இந்து கலாசாரமும் முன்னெப்போதும் இல்லா வகையில் பெருவளர்ச்சியடைந்திருந்தது.

**சிங்கள மன்னர்களின் ஆதரவு**

**1ஆம் விஜயபாகு**

பாளி இலக்கியங்களில் "சிங்கள இனத்தின் விடுதலை வீரனாக 1ஆம் விஜயபாகு சித்தரிக்கப்படுகின்ற போதிலும் இவனும்கூட இந்துசமயத்தை ஆதரித்து நின்றதைக் காணமுடிகின்றது. இதுபற்றி பரணவிதான பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "அரச கட்டிலேறின பின்னர் இந்துமத வழிபாட்டு முறைகளைப் புறக்கணிக்க முடியவில்லை. இவன் சோழர்கால சமய ஸ்தானங்கள் தொடர்ந்து இயங்க அனுமதித்ததோடு தனது காலத்தில் அமைக்கப்பட்ட சைவக்கோயில்களுக்கும் தனதாதரவை வழங்கினான்". இவ்வகையில் சோழர்களால் கந்தளாய் பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட ராஜராஜேஸ்வரமும், ராஜராஜசதுர்வேதி மங்கலமும் 1ஆம் விஜயபாகுவினால் விஜயராஜேஸ்வரம், விஜயராஜ சதுர்வேதி மங்கலம் எனப்பெயர் மாற்றப்பட்டு ஆதரவு வழங்கப்பட்டது. விஜயபாகுவின் 42ஆம் ஆண்டிற்குரிய பாளமோட்டை சாசனம் கந்தளையான விஜயராஜசதுர்வேதி மங்கலத்து விஜயராஜ ஈஸ்வரமுடையார் கோயிலுக்கு நங்கைசாணி என்னும் பிராமணப் பெண் தன் கணவன் புண்ணியத்திற்காக வழங்கிய நன்கொடைகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை சான்றாகும்.

**2ஆம் விக்கிரமபாகு**

பொலன்னறுவைக்கால மன்னர் வரிசையில் விஜயபாகுவுக்குப் பின்னர் முடிசூடிய ஜெயபாகு (கி.பி. 1110 –. 1112) குறுகிய காலமே ஆட்சிபுரிந்துள்ளான். இவனைத் தொடர்ந்து ஆட்சிபுரிந்த 2ஆம் விக்கிரபாகு கலிங்க இளவரவன் திரிலோக சுந்தரிக்கும், 1ஆம் விஜயபாகுவுக்கும் பிறந்த மகனாவான். இவனுடைய தாய் இந்து சமயச்சார்புடையவளாகையால் 2ஆம் விக்கிரமபாகுவும் இந்துசமயச் சார்புடையவனாகவே பொலன்னறுவையை இராசதானியாகக் கொண்டு 21 ஆண்டுகள் (கி.பி. 1111 – 1132) ஆட்சிபுரிந்துள்ளான் என்பதை அவன்காலத்து சாசனக்குறிப்புக்கள் குறிப்பிடுகின்றன. குறிப்பாக காகம்பிலியாவக் கல்வெட்டு, குருநாகல் மாவட்டத்திலுள்ள மாகல என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டுக்களினூடாக இவனுடைய இந்துமதப் பற்றினை அறிய முடிகின்றது. காகம்பிலியாவக் கல்வெட்டில் விக்கிரமபாகு தன்னை "பார்வதிபதி தந்தாஸிர்

வீரவிருஷநீதிபராயன்ய ராஜநாராயண (பார்வதியின் பதியாகிய நாதனின் கிருபை பெற்றவனும் வீர நந்தியுமாகிய அவனுக்கு ஒழுக்கமே இறுதிக்குறிக்கோள்) என தன்னை வர்ணித்துள்ளான். குருணாகல் கல்வெட்டுக்கள் மாகல என்ற இடம் இவன் பெயரால் விக்கிரமசாளமேகபுர எனவும் அங்குள்ள சிவதேவாலயம் "விக்கிரமசாளமேகஸ்வரம்"என அழைக்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றன. இதேவேளை சூளவம்சமும் "அவசியமான யாகத்தையும் ஏனைய இந்துககிரியைகளையும் வேதங்களையும் வேதங்களிலும், வேதாகமங்களிலும் கைதேர்ந்த தனது புரோகிதர்களாலும் ஏனைய பிராமணர்களாலும் நிறைவேற்றினான்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் சூளவம்சம் விக்கிரமபாகு பௌத்தமத நிறுவனங்களுக்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவே வர்ணிக்கிறது. அதாவது இவன் தன்னிச்சையாக. பௌத்த கோயில்களின் நிலங்களைத் தனது சேவையில் இருந்தோருக்கு அளித்ததோடு நகரத்திலுள்ள விகாரைகளையும், வெளிநாட்டு படைவீரர்களின் வாசஸ்தலங்களாக மாற்றியதோடு தந்ததாதுக் கோயில்கள் போன்றவற்றுக்கு கொடுக்கப்பட்ட பொருட்களையும் தன்னிச்சையாக விரயஞ் செய்தான் எனக்கூறுகிறது. இதனூடாக விக்கிரமபாகு பௌத்தமதத்திற்கு ஆதரவு எதுவும் வழங்காமல் இந்துசமயத்தை பின்பற்றி ஆட்சிபுரிந்துள்ளான் என்பது புலனாகிறது.

**மானாபர்ணன்**

தக்கணதேச ஆட்சியாளனும் 1ஆம் பராக்கிரமபாகுவின் தந்தையான மானாபர்ணனின் ஆட்சிக்காலத்திலும் இந்துசமயமும், இந்துப் பண்பாடும் செழிப்புற்றிருந்தது. மானாபரணனின் அரண்மனையில் அந்தணர்கள் ஓமம் வளர்த்து யாகங்கள் செய்தனரென்று சூளவம்சம் குறிப்பிட்டுள்ளது. அதாவது மானாபர்ணன், அக்கனவுக்கான விளக்கத்தை புரோகிதர்களை அழைத்து அறிந்து கொண்டதோடு மகப்பேறு சிறப்பாக நடைபெற தன்னுடைய அரண்மனைப் புரோகிதர்களாலும், வேதசாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்ற ஏனைய பிராமணர்களாலும் நன்மை பயக்கும் வேள்விகளைச் செய்ததோடு பிராமணர்களுக்கு விசேடமாக தானங்கள் வழங்கினான் என்கிறது. மேலும் மகன் (பராக்கிரமபாகு) பிறந்தது முதல் அரசுரிமை அடையும் காலம் வரை வைதீக சம்பிராதயப்படி சடங்குகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் சூளவம்சம் விபரிக்கிறது. "பிள்ளைக்கு வேண்டிய ஜாதகருமம் முதலான சடங்குகளை வேதவிதிப்படி அரசன் செய்வித்தான். அதன் பின்னர் புரோகிதரையும், அங்கலஷ்ணங்கள் ஆராயும் விற்பன்னரான பிராமணர், பிறரையும் வரவழைத்து அவர்களுக்குரிய வழமையான மரியாதைகளோடு உபசாரஞ் செய்தான். பிள்ளையினுடைய அங்கலஷ்ணங்களின் குணநலன்களை விளக்குமாறு அவர்களை வேண்டினான். சடங்குகளைப் பற்றி நன்கறிந்தவனாகிய மன்னன் கர்ணவேதனம், அன்னப்பிராசனம், ஆகிய கருமங்களை வழமைப்படியே செய்வித்தான்"

**2ஆம் கஜபாகு**

விக்கிரமபாகுவுக்குப் பின்னர் அவனுடைய மகனான 2ஆம் கஜபாகு ஒரு இந்து ஆட்சியாளனாக 22 வருடங்கள் (1132 – 1153) ஆட்சி புரிந்துள்ளான். கஜபாகுவும் தந்தையைப் போல் ஓர் சைவனாகவே ஆட்சி செய்ததால் பாளி இலக்கியங்களில் இவனும் முக்கியப்படுத்தப்படவில்லை. சூளவம்சத்தில் கஜபாகுவின் முடிசூட்டுவிழா பற்றிய எவ்வித தகவலும் குறிப்பிடப்படவில்லை. இதேவேளை ஈழத்தையாண்ட மன்னர்களின் வரிசையில் கஜபாகுவின் பெயர் இராஜாவலியா, பூஜாவலியா போன்ற நூல்களில் இடம்பெற்றிருக்காமையும் குறிப்பிடத்தக்கது. சூளவம்சம் கஜபாகு மன்னனை "மதநம்பிக்கையற்றவர்களை வெளிநாட்டில் இருந்து அழைத்து வந்து நாட்டை நிறைத்தான்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கஜபாகுவின் இந்து மதப்பணிகள் பற்றிய தகவல்களை கோணேசர் கல்வெட்டு, திருக்கோணசல புராணம், மாங்கனாய் கல்வெட்டு போன்றன தருகின்றன. இம்மன்னன் பெருமாள், கஜபாகுதேவர், சலாமேகன் போன்ற இந்துமதம் சார்பான விருதுப்பெயர்களை சூடிக்கொண்டிருந்தார். திருக்கோணேஸ்வரத்தின் அர்ச்சகராக இருந்த பாசுபதபிராமணர் இறந்ததைத் தொடர்ந்து கோணேசர் ஆலய நிர்வாகத்திலும், பூசை நடைமுறையிலும் பல தடைகள் ஏற்பட்டு இருந்தன. கோணேசர் ஆலயத்திற்கு வருகை தந்த 2ம் கஜபாகு மன்னன் தடைகளை நிவர்த்தி செய்ய 1522 களஞ்சுபொன் மற்றும் 249 களஞ்சு பொன்னகை கொடுத்ததாக கோணேசர் கல்வெட்டு கூறுகிறது. இவ்வாறு கஜபாகு இந்து மதத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தமை தான் பௌத்த மதத்தை முதன்மைப்படுத்தும் 'சூளவம்சத்தில்

இவனுடைய வரலாறு முதன்மைப்படுத்தி கூறப்படாததற்கு முக்கிய காரணமென வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**ஆம் பராக்கிரமபாகு**

1ஆம் பராக்கிரமபாகு பௌத்த மதத்திற்கு பங்களிப்பு செய்த அதேவேளை இந்துசமயத்திற்கும், ஆதரவு அளித்துள்ளான். சூளவம்சம் இம்மன்னன் 13கோயில்களை புதிதாக நிறுவியதோடு 79கோயில்களை புனரமைப்புச் செய்ததாக குறிப்பிட்டுள்ளது. மேலும் இம்மன்னன் பிராமணர்களுக்கு தானம் கொடுத்ததோடு, பிராமணர்கள் பிராயசித்த சடங்குகளை மேற்கொள்ளவும் மந்திரங்களை ஓதவும் கேமமண்டலத்தையும் அழகிய தரணிகாராவையும் நிர்மானித்து பிராமணர்களை ஆதரித்தான் என்ற செய்தியையும் குறிப்பிடுகிறது.

**நிஸங்கமல்லன்**

பராக்கிரமபாகுவிற்கு பின்னர் பொலன்னறுவையில் ஆட்சி செய்த மன்னர்களுள் மிகவும் பிரசித்தி பெற்றவனாகவும், பௌத்தத்தைப் பெரிதும் ஆதரித்தவனாகவும் விளங்குபவன் கலிங்க நாட்டில் இருந்து வந்த நிஸங்கமல்லன் ஆவான். கலிங்க நாட்டில் இருந்து வருகை தந்த இம்மன்னன் அரசியல் தேவைகளுக்காக பௌத்தர் அல்லாதோர் அரசுரிமை பெறத்தகுதியற்றவர் என வற்புறுத்திய போதும் இந்து சமயத்தையும் ஆதரித்து ஆட்சி புரிந்துள்ளான். பொலன்னறுவை முதலாம் சிவாலயக் கல்வெட்டில், இச்சிவாலயத்தில் தான் நடாத்திய நவக்கிரக சாந்தியின் போது தன்னை தூய்மைப்படுத்துவதற்காக தூய்மைச்சடங்கு சார்ந்த ஸ்தானத்தில் ஈடுபட்டான் என்ற செய்தி காணப்படுகிறது. கந்தளாயில் கிடைத்த சாசனத்தில் இம்மன்னன் சதுர்வேதிபிரம்மபுரத்திற்குச் சென்ற போது அங்குள்ள பார்வதிசத்திரம் எனும் தானசாலையில் நடைபெற்ற தானதருமங்களை நேரில் பார்வையிட்டான் எனவும் கந்தளாய் சிவன் ஆலயத்தில் நடந்த நடன நிகழ்ச்சியையும் சங்கீத கச்சேரியையும் கண்டுகளித்தான் எனக்குறிப்பிடுகின்றது.

**பிற்பட்ட கால மன்னர்கள்**

பிற்பட்ட கால பொலன்னறுவையில் 2ஆம் விஜயபாகு தொடக்கம் கலிங்கமாகன் வரை (கி.பி 1184 – 1215) 13 பேர் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களுள் பதினொரு பேர் கலிங்க வம்சத்தையும், ஒருவர் பாண்டிய வம்சத்தையும் மற்றைய ஒருவர் மட்டுமே சிங்கள வம்சத்தைச் சேர்ந்தவராகவும் ஆட்சி புரிந்துள்ளனர். இறுதியில் கலிங்கத்தில் இருந்து வந்து பொலன்னறுவையைக் கைப்பற்றி இராசதானியின் வீழ்ச்சிக்கு காரணமான கலிங்கமாகனும் கலிங்க வம்சத்தைச் சேர்ந்தவனாகையால், இவனும் இந்து சமயத்தை இறுக்கமாக அரசில் பின்பற்றி இருந்தான். இதுபற்றி சூளவம்சமும், மட்டக்களப்பு மான்மியமும் விபரித்துள்ளன. இதனால் பொலன்னறுவைக் கால அரசின் ஆதரவை இறுதிவரை இந்துசமயம் பெற்றிருந்தது எனலாம்.

**முடிவுரை**

மேற்கூறப்பட்ட அம்சங்களைத் தொகுத்து நோக்கும் போது இலங்கையில் இந்து சமயத்தின் செல்வாக்கு வரலாற்று உதய காலத்தில் இருந்தே நிலவிவந்துள்ளது. இலங்கைக்கு பௌத்தத்தின் அறிமுகத்தை தொடர்ந்து அரசமதமாக பௌத்தமதம் அரசர்களால் கடைப்பிடிக்கப்பட்டாலும் இந்துமதமும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இதன் உச்ச வளர்ச்சிக் காலமாக பொலன்னறுவைக் காலம் அமைந்துள்ளது. இக்காலத்திலும் அரசியல் பகை காணப்பட்ட போதும் சமயங்களுக்கிடையிலான உறவுநிலை உன்னதமாகவே இருந்துள்ளது. இந்துசமயம் பௌத்தத்தைப் போல பேணப்பட்டதால் இந்துசமயம் சார் கலைமரபுகள், சம்பிரதாயங்கள், விழாக்கள் போன்றனவும் செல்வாக்கு பெற்றன. இதனால் பொலன்னறுவைக் கால அரசில் பல்லினப்பண்பாடு உச்ச வளர்ச்சி பெற்றுச் சென்றுள்ளதை அவதானிக்க முடிகிறது.

**உசாத்துணை நூல்கள்**


1. *சூளவம்சம்*
2. இந்திரபாலா.கா., 2006,*இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆதிக்கம் பெற்ற வரலாறு பொ.ஆ.மு.300 – பொ.ஆ.1200*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு- சென்னை.
3. சரவணபவன்.க., 2003,*வரலாற்றுத் திருகோணமலை,* திருகோணமலை வெளியீட்டாளர், திருகோணமலை.
4. சிற்றம்பலம்.சி.க., 1996, *ஈழத்து இந்துசமய வரலாறு பாகம் - 1*, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.
5. சிற்றம்பலம்.சி.க., 1976, *இலங்கையில் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்கள் காட்டும் இந்துமதம்,* சிந்தனை - தொகுதி 1 இதழ் 2.
6. பத்மநாதன்.சி., 2006, *இலங்கைத் தமிழ் சாசனங்கள்(கி.பி.700 - 1300),* இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
7. பத்மநாதன்.சி., 2000, *இலங்கையில் இந்து கலாசாரம் - பகுதி 1,* இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
8. புஷ்பரட்ணம்.ப., 2017*, இலங்கைத் தமிழர் ஒரு சுருக்க வரலாறு*, தமிழ்கல்விச் சேவை, சுவிற்சர்லாந்து.
9. Pathmanathan.S., 1987, *Hinduism in Sri Lanka (Circa A.D.1000- 1250) Indian influences on the development of Saivam*, Modern Sri Lanka Studies Vol 2 No 1,University of Peradeniya, Sri Lanka.
10. Swaminathan.K.D, 1960- 1961, *An Inscription of Gajabahu II (One Plate)*, Ceylon Historical Journal Tenth Anniversary Vol 10.